
நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 64 | 4 Pages | 3.10.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 64 | 4 பக்கங்கள் | 3.10.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு**

**விளக்கம்:**
பிறரால்இகழப்படால்வாழவிரும்புகிறவன்,எத்தன்மையானப் பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக்கொள்ள எண்ணாதபடி தன் நெஞ்சைக் காக்க வேண்டும்.

## இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் துப்பாக்கி சூடு



இஸ்ரேல், அக்.3

பாலஸ்தீனத்தின் காசா மற்றும் லெபனான் மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலுக்கு ஈரான் ஏவுகனை வீசி வரும் நிலையில் டெல் அவிவ் நகரில் துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்துள்ளது.

அந்த இடத்தின்காட்சிகள் இணையத்தில் வெளியாகியுள்ளன. ஒரு தெருவில் சடலங்கள் கிடப்பதைக் காணப்பட்டது அதேபோல் துப்பாக்கிச் சூடும்சத்தங்கள்சமூகஊடகங்களில்பலரால்பகிரப்பட்ட வீடியோக்களில் கேட்கப்பட்டன. கொல்லப்பட்டவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் எண்ணிக்கை இன்னும் தெரியவில்லை.

## இஸ்ரேலுக்கு உதவி செய்ய அமெரிக்க ராணுவத்திற்கு ஜோ பைடன் உத்தரவு



இஸ்ரேல், அக். 3

இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் பகுதிகளில் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மத்திய இஸ்ரேல் முழுவதும் வான்வழி தாக்குதல் நடத்த எச்சரிக்கை சைரன்கள் ஒலிக்கப்பட்டு இருக்கிறது.

ஈரானில் இருந்து இஸ்ரேல் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன.


இஸ்ரேலில் உள்ள தங்கள் நாட்டு மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

லெபனானில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரமாகி வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேலுக்கு உதவி செய்ய அமெரிக்க ராணுவத்திற்கு ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

இஸ்ரேலை குறிவைத்து ஏவப்படும் ஏவுகணைகளை தகர்க்குமாறு அமெரிக்க படைகளுக்கு பைடன் உத்தரவிட்டுள்ளார்.

## இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசும் ஈரான்



இஸ்ரேல், அக். 3

பாலஸ்தீனத்தின் காசா மற்றும் லெபனான் மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலுக்கு ஈரான் மிரட்டல் விடுத்துள்ளது. இந்த நிலையில் ஈரானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்து இருக்கிறது.

இதுகுறித்து அமெரிக்க பாதுகாப்புத்துறை மந்திரி லாய்டு ஆஸ்டின் கூறியதாவது:

இஸ்ரேலை பாதுகாப்பதற்கான உரிமை அந்நாட்டுக்கு இருக்கிறது. இதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கிறது. ஏற்கனவே இஸ்ரேலில் கடந்த ஆண்டு அக்டோபர் 7ந்தேதி நடத்தப்பட்ட தாக்குதல்களைப் போன்று, இஸ்ரேலின் வடக்கு எல்லைகளில் லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா தாக்குதல்கள் நடத்தாமல் இருப்பதை உறுதிசெய்ய, அதன் கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நிகழ்த்த வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ளோம். மத்திய கிழக்குப் பகுதிகளில் அமெரிக்க பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் அமெரிக்காவின் கூட்டாளிகளுக்கு, ஈரான் மற்றும் ஈரான் ஆதரவு இயக்கங்களிலிருந்து வரும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதில் அமெரிக்கா வலுவாக உள்ளது.

அதேபோல, போர் பதற்றத்தை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளை தடுப்பதிலும் அமெரிக்கா உறுதியாக உள்ளது. இஸ்ரேல் மீது ஈரான் நேரடியாக ராணுவ தாக்குதல்களை நிகழ்த்தினால் ஈரான் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றார்.

இந்நிலையில் இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் பகுதிகளில் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மத்திய இஸ்ரேல் முழுவதும் வான்வழி தாக்குதல் நடத்த எச்சரிக்கை சைரன்கள் ஒலிக்கப்பட்டு இருக்கிறது.

ஈரானில் இருந்து இஸ்ரேல் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன. இஸ்ரேலில் உள்ள தங்கள் நாட்டு மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

லெபனானில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரமாகிறது.


# சிறப்பாக செயல்பட்ட 5 காவல்துறை பணியாளர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது: முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, அக். 3

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட ஐந்து காவல்துறை பணியாளர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது முதலமைச்சர் அவர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக

1. சின்னகாமணன், காவல் ஆய்வாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு விழுப்புரம் மண்டலம்,





2. மகாமார்க்ஸ், தலைமை காவலர்1989, விழுப்புரம் தாலுகா சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம்,

3. கார்த்திக், தலைமை காவலர் 2963. துறையூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, திருச்சி மாவட்டம்,

4. சிவா, இரண்டாம் நிலை காவலர் 1443, ஆயுதப்படை, சேலம் மாவட்டம்

5. பூமாலை, இரண்டாம் நிலை காவலர் 764, ஆயுதப்படை, சேலம் மாவட்டம்,

ஆகியோருக்கு 2024ம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இவ்விருது, முதலமைச்சர் அவர்களால் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40.000/ ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

# லாரி மோதியதில் சட்டக்கல்லூரி மாணவி பலி



மதுரை, அக். 3

கள்ளந்திரி அருகே இருசக்கரவாகனம் மீது டிப்பா் லாரி மோதியதில் சட்டக் கல்லூரி மாணவி செவ்வாய்க்கிழமை உயிரிழந்தாா்.

மதுரை பி.டி.ராஜன் சாலை அரசமரம் பகுதியைச் சோ்ந்த ரகு மகள் ஐஸ்வா்யாசக்தி (22). இவா் மதுரை அரசு சட்டக் கல்லூரியில் இறுதி யாண்டு பயின்று வந்தாா்.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை கல்லூரி முடிந்து, மதுரை மாவட்டம், கள்ளந்திரி அருகே உள்ள சுந்தர்ராஜன்பட்டி வழியாக இரு சக்கர வாகனத்தில் சென்றாா். அப்போது, பின்னால் வந்த டிப்பா் லாரி கட்டுப்பாட்டை இழந்து இரு சக்கர வாகனம் மீது மோதியது. இதில் அவா் லாரி சக்கரத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தாா். இதுகுறித்து அப்பன் திருப்பதி போலீஸாா் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனா்.

# கடலூர் மாவட்டத்தில் மங்களூர் ஊராட்சி ஒன்றியம், பெண்ணாடம் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சி திட்டப் பணிகள்



கடலூர், ஆக. 4

கடலூர் மாவட்டம், மங்களூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் பெண்ணாடம் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மங்களூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டமத்தான் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.17.15 இலட்சம் மதிப்பீட்டில் கண்டமத்தான் வடக்கு ஓடையில் தடுப்பணை கட்டுமான பணிகள் நடைபெறுவதையும், மேலும் அவ்வூராட்சியில் வண்ணாத்துறை ஓடை அருகில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத் தின் கீழ் ரூ.22.28 இலட் சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையையும் மற்றும் தொழுதூர் ஊராட் சியில் மாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பெருமளவில் மரக்கன்றுகள் வைத்து பராமரிக்கப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெண்ணாடம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கசடு கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ரூ.258 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெறுவதையும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ரூ.630 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெறுவதையும், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.148 இலட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை பணிகள் குறித்தும், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.122 இலட்சம் மதிப்பீட்டில் முக்குளம் தூர்வாரி புனரமைக்கும் பணிகள் நடைபெறுவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, பெண்ணாடம் புதிய பேருந்து நிலையம் மற்றும் மார்க்கெட் பகுதிகளிலும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டிடத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# காந்தியின் பிறந்த நாளையொட்டி ஈரோட்டில் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் மாலை அணிவித்து மரியாதை



ஈரோடு, அக். 4

காந்தி பிறந்த நாளையொட்டி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி தமிழ் மாநில காங்கிரஸின் மாநகர மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது .இதில் மாநில உயர் மட்ட குழு உறுப்பினர் ஆறுமுகம் மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்தார் நிகழ்ச்சியில் மாநிலத் துணைத் தலைவர் விடியல் சேகர்,மாநில பொதுச் செயலாளர் யுவராஜா,மாநில செயற்குழு உறுப்பினர் எஸ் டி சந்திரசேகர், தொழிற்சங்க தலைவர்ர.ஃ பிக் எஸ் டி எஸ் சி பிரிவுதலைவர் கண்ணம்மா, மகளிர் அணி துணைத்தலைவர் மோகனா,மாநகர மாவட்ட வர்த்தக பிரிவு தலைவர் செல்லத்துரை உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதே போல் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக ஈரோடு மாநகராட்சியின் வளாகத்தில் உள்ள மகாத்மா காந்திஜியின் 155 வது பிறந்த நாளை முன்னிட்டு அஹிம்சா மூர்த்தி மகாத்மா காந்திஜியின் சிலைக்கு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் டி.திருச்செல்வம் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு பின் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவருடைய திருவுருவ சிலைக்கு மண்டல தலைவர் எச்.எம். ஜாபர் சாதிக் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் டி திருசெல்வம் தலைமையில் மகாத்மா காந்திஜி அவர்களின் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் பிறந்த நாள் மற்றும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் எம்.ஜவஹர் அலி மாலை அணிவித்தார். துணைத்தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா எச்.எம்.ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# தென்காசியில் கிராம சபைக்கூட்டம்

தென்காசி, அக். 3

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் இராமநாதபுரம் ஊராட்சியில் காந்தி ஜெந்தியினை முன்னிட்டு ஊராட்சிமன்ற தலைவர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் கலந்து கொண்டார்.

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ராமநாதபுரம் ஊராட்சியில் காந்தி ஜெந்தியினை முன்னிட்டு ஊராட்சி மன்றத்தலைவர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது,

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல் மற்றும் கிராம ஊராட்சியின் (2023-2024) ஆண்டு தணிக்கை அறிக்கை மற்றும் தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், மக்கள் திட்டமிடல் இயக்கம், மாற்று திறனாளிகளுக்கான கணக்கெடுப்பு உரிமைகள் திட்டம், ஜல்ஜீவன் இயக்கம் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என மாவட்ட கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்தார். இக்கிராம சபைக்கூட் டத்தில் பெ ாதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட கலெக்டர் பெற்றுக் கொண்டார். இக்கூட்டத்தில், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பொ.ச.அனிதா, சிவகிரி வட்டாட்சியர் ரவிக்குமார், வாசுதேவநல்லூர் வட்டார வளர்ச்சி அலுலவர்கள் மல்லிகா, கருப்பசாமி, வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்பொன்முத்தையா பாண்டியன், துணைத் தலைவர்மோகன் மற்றும் பிறதுறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரூபாய் 5 கோடி 36 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக பூமி பூஜை நடைபெற்றது. இதில் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி K.S.மஸ்தான் கலந்து கொண்டு பணியினை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் R. விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் செஞ்சி ஒன்றிய துணை தலைவர் ஜெயபாலன் , கழக நிர்வாகிகள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்

# காஞ்சி கோவில் சிலை அமெரிக்காவில் கண்டுபிடிப்பு



காஞ்சி, அக். 3

காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர்கோவிலுக்குச்சொந்தமான தொன்மை வாய்ந்த 8 கோடி ரூபாய் மதிப்பிலான சோமஸ்கந்தர் உலோகச்சிலை, அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோ ஏசியன் ஆர்ட் மியூசியத்தில் இருப்பதை சிலை திருட்டு தடுப்பு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இதுபற்றி விசாரணை நடத்த சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஐ.ஜி. தினகரன், சூப்பிரண்டு சிவக்குமார் ஆகியோரது மேற்பார்வையில் பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர் தமிழ்ச்செல்வி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

தனிப்படை போலீசார் இணையதளங்களில் ஆய்வு செய்து குறிப்பிட்ட சோமஸ்கந்தர் சிலை அமெரிக்காவில் உள்ள குறிப்பிட்ட கலைக்கூடத்தில் இருப்பதை உறுதி செய்தனர்.

அந்த சிலையின் படமும் இணையதளத்தில் வெளியாகி இருந்தது. அந்த சிலையில் தெலுங்கிலான எழுத்துகள் காணப்பட்டது. அந்த எழுத்துகளை படித்து பார்த்த போது அந்த சிலை காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அந்த சிலை கி.பி. 1500 முதல் 1600க்குள்செய்யப்பட்டது என்பதும் கண்டறியப்பட்டது. அந்த சிலையை தொண்டைமண்டலத்தை சேர்ந்த வெங்கட்ராமநாயனி என்பவர் ஏகாம்பரேஸ்வரர் கோவிலுக்கு கொடுத்துள்ளார் என்பதும் சிலையில் காணப்பட்ட எழுத்துகள் மூலம் தெரிய வந்தது.

அந்த சிலையின் சர்வதேச மதிப்பு ரூ.8 கோடி என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மர்ம நபர்கள்யாரோஅந்தசிலையை ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் இருந்து திருடி அமெரிக்காவுக்குகடத்திசென்று கோடிக்கணக்கான விலைக்கு விற்றுள்ளனர். இதுதொடர்பாக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த சிலையை அமெரிக்காவில் இருந்து மீட்டு கொண்டு வருவதற்கு கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ஒருவர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த சிலை விரைவில் தமிழகத்துக்கு கொண்டு வரப்பட்டு காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் ஒப்படைக்கப்படும் என்று சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் தெரிவித்தனர்.

# திருப்பூர் பனியன் நிறுவன உரிமையாளர் வாலிபரிடம் ரூ.46 லட்சம் மோசடி: வாட்ஸ்அப் குழு மோசடி

திருப்பூர், அக். 3

திருப்பூர் அம்மாபாளையத்தை சேர்ந்தவர் ராஜசேகர் (வயது 53). இவர் பனியன் நிறுவனம் வைத்துள்ளார். இவருக்கு கடந்த ஜூலை மாதம் 30ந் தேதி வாட்ஸ்அப் மூலம் அழைப்பு வந்தது. அப்போது அதில் பேசிய நபர் பங்குச்சந்தையில் லாபகரமான பங்குகளுக்கான பரிந்துரைகளைவழங்குவதாக உறுதியளித்தார்.

அந்த நபர் கூறியபடி வாட்ஸ்அப் லிங்குக்குள் சென்று உறுதி செய்துள்ளார். பின்னர் ராஜசேகரை வாட்ஸ்அப் குழு ஒன்றில் இணைத்துள்ளனர். தொடர்ந்து அந்த வாட்ஸ்அப் குழுவில் வந்த யாதவ் என்பவர், ராஜசேகரிடம் குறிப்பிட்ட பங்குவர்த்தகத்தில் முதலீடு செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என கூறியுள்ளார்.

ராஜசேகரும் அவருடைய செல்போனில் யாதவ் அனுப்பிய இணைப்பை பதிவேற்றம் செய்துள்ளார். தொடர்ந்து யாதவ் கூறியபடி ராஜசேகர், பங்குச்சந்தை வாட்ஸ்அப்பில் குறிப்பிட்ட வங்கி கணக்கிற்கு பல பரிவர்த்தனைகள் மூலம் ரூ.41½ லட்சம் அனுப்பியுள்ளார். அந்த குழுவில் தனது லாப பணத்தை ராஜசேகர் கேட்ட போது எந்த பதிலும் வரவில்லை.

அதன்பிறகே மோசடி நபர்களால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ராஜசேகர் மாநகர சைபர் கிரைம் போலீசாரிடம் புகார் தெரிவித்தார். புகாரின் பேரில் மாநகர சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இதேப்போல் திருப்பூர், காட்டுவளவு பகுதியை சேர்ந்தவர் ஞானசுந்தரம் (29). இவருக்கு கடந்த ஜனவரி மாதம் வாட்ஸ்அப்பில்பகுதிநேரவேலை வழங்குவதாக கூறி குறுஞ்செய்தி வந்தது. அதில் ஓட்டல்களை மதிப்பாய்வு செய்து கொடுத்தால் லாபம் கிடைக்கும் என கூறப்பட்டிருந்தது. இதனை நம்பிய ஞானசுந்தரம் சம்பந்தப்பட்ட வாட்ஸ்அப் குழுவின் வழிகாட்டுதலின் படி செயல்பட்டுள்ளார். தொடர்ந்து ஞானசுந்தரமும், திருப்பூரில் ஓட்டல்களை மதிப்பாய்வு செய்து கொடுத்து கமிஷன் பெற்று வந்துள்ளார்.

பின்னர் பணத்தை முதலீடு செய்தால் கூடுதல் லாபம் கிடைக்கும் என குறுஞ்செய்தி வந்துள்ளது. இதை நம்பிய ஞானசுந்தரம் ரூ.5 லட்சத்து 65 ஆயிரத்தை செலுத்தியுள்ளார். தொடர்ந்து ஞானசுந்தரம் செலுத்திய பணத்திற்கு லாபம் எதுவும் கிடைக்காமல் இருந்துள்ளது. இது குறித்து வாட்ஸ்அப் குழுவில் கேட்க ஞானசுந்தரத்திற்கு எந்தபதிலும்கிடைக்கவில்லை. அதன்பிறகே ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ஞானசுந்தரம் மாநகர சைபர் கிரைம் போலீசாருக்கு புகார் அளித்தார். மாநகர சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து வாட்ஸ்அப் குழு மோசடி கும்பல் குறித்து விசாரணை நடத்தி தேடி வருகின்றனர்.

# கள்ளச்சாராய மரண வழக்கு... 3 பேரின் ஜாமின் மனுக்கள் தள்ளுபடி



கள்ளக்குறிச்சி, அக். 3

கள்ளக்குறிச்சியில் கடந்தஜூன்மாதம்18ஆம் தேதி அன்று மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்ததால் உடல்நலம் பாதிக்கப்பட்டு 193 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அதில் 67 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரண வழக்கை சிபிசிஐடி விசாரித்து வருகிறது.

இதற்கிடையே, இந்த வழக்கில் ஜாமின் கோரி சடையன், வேலு, கௌதம் ஜெயின் உள்ளிட்டோர் மனுத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது சடையன், கௌதம் மற்றும் ஜெயின் ஆகிய 3 பேரின் ஜாமின் மனுக்களை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

சிபிசிஐடி விசாரணை நடந்துவருவதால் ஜாமின் வழங்கக்கூடாது என அரசுத்தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் ஜாமின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. இரண்டாவது முறையாக ஜாமின் மனுக்கள்தள்ளுபடி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காந்தியடிகளின் 156வது பிறந்த நாளை முன்னிட்டு உருவ சிலைக்கு மாவட்ட கலெக்டர் மாலை அணிவித்து மரியாதை



ஊட்டி, அக். 3

நீலகிரி மாவட்டத்தில், உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ம் தேதி உதகை நகராட்சிக்குட்பட்ட சேரிங்கிராஸ் பகுதியில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

அந்த வகையில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உதகை, சேரிங்கிராஸ் பகுதியில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், உதகை நகராட்சி ஆணையாளர் ஜஹாங்கீர் பாஷா, உதகை வட்டாட்சியர் சரவணகுமார், உதகை நகராட்சி செயற்பொறியாளர் சேகரன், வார்டு உறுப்பினர் ரஜினிகாந்த், நீலகிரி மாவட்ட மதநல்லிணக்க அமைதிக் குழு தலைவர் கிருஷ்ணன், செயலாளர் ஹாஜி முகம்மது அலி மற்றும் பல்வேறு தன்னார்வ தொண்டு அமைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கதர் அங்காடியில் தீபாவளி விற்பனை: குத்துவிளக்கேற்றி மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்




திண்டுக்கல், அக். 3

திண்டுக்கல் அண்ணா வணிக வளாகத்தில் அமைந்துள்ள கதர் அங்காடியில், கதர் கிராம தொழில்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்ற அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் விழா மற்றும் தீபாவளி சிறப்பு விற்பனை துவக்க விழாவில் மாவட்ட கலெக்டர் மொ. நா.பூங்கொடி, தலைமை வகித்து, அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, குத்துவிளக்கேற்றி வைத்து, தீபாவளி சிறப்பு விற்பனையை துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது

இந்திய திருநாட்டின் இதயமாக விளங்கும் கிராமப்புற ஏழை, எளிய நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் உயரிய சேவையை முதற்குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் அனைத்து கதர் அங்காடிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் துவக்கப்பட்டுள்ள தற்காலிக கதர் விற்பனை நிலையங்களில் பெருமளவில் கதர் ரகங்கள் வாங்குவதன் மூலம் கிராமப்புற ஏழை, எளிய நூற்போர்கள் மற்றும் நெய்வோர்களின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில், பொதுமக்கள் கதர் ரகங்களை வாங்கி ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவற்றை அரசு அலுவலர்களும் மற்றும் பொதுமக்களும் வாங்கி, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் மற்றும் நூற்பாளர்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்க வேண்டும், என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

முன்னதாக, திண்டுக்கல் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட கலெக்டர் மொ. நா.பூங்கொடி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.ஜெகவீரபாண்டியன், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உதவி இயக்குநர் திரு.பா.குமரன், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் ஜெயபிரகாஷ் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# பாரம்பரிய சித்தா ஓமியோபதி மருத்துவர்களுக்கு நலவாரியம் மீண்டும் அமைக்க வேண்டும்: தமிழக அரசுக்கு கோரிக்கை




தஞ்சாவூர், அக். 3

தஞ்சை பெசண்ட் அரங்கில் தமிழக ஓமியோபதி சித்தா டாக்டர்கள் சங்க ஆண்டு விழா நடந்தது. விழாவிற்கு சங்கத்தின் மாநில தலைவர் முகமது இக்பால்தீன் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் டாக்டர் கே.சின்னையன் வரவேற்றார். மாநில துணைத் தலைவர் செல்வகாந்தன், மாநில பொருளாளர் பாஸ்கர் பாண்டியன் துணைப் பொதுச் செயலாளர் தமிழ்ச்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர் டாக்டர் பூந்தோட்டம் சேதுராமன் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி ஆண்டு விழாவை தொடங்கிவைத்தார். அவர் சித்தர்கள் படத்தை திறந்து வைத்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: டாக்டர் கலைஞர் முதல் அமைச்சராக இருந்த போது அமைக்கப்பட்ட பரம்பரை மருத்துவர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நலவாரியம் செயல்படவில்லை. எனவே முதல் அமைச்சர் தனிக்கவனம் செலுத்தி பாரம்பரிய சித்தா ஓமியோபதி மருத்துவர்களுக்கு நலவாரியம் மீண்டும் செயல்பாட்டுக்கு வர ஆவண செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். பாரம்பரிய மருத்துவத் தொழிலை பாதுகாக்க மாவட்ட ஆட்சியர் மூலம் மருத்துவ தொழில் பாதுகாப்பு சான்றிதழ் வழங்க வேண்டும் போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விழாவில் டாக்டர்கள் தஞ்சை முகமது இக்பால்தீன் திருவாரூர் பக்கிரிசாமி மன்னார்குடி மாரிமுத்து திருவாரூர் சங்கர் தூத்துக்குடி பாஸ்கர் பாண்டியன் கடலூர் மீனாட்சி சுந்தரம் மருதவாணன் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. முடிவில் ஜி.தமிழ்ச்செல்வம் நன்றி கூறினார்.

# வார இறுதி நாட்களை முன்னிட்டு கூடுதல் பேருந்துகள் இயக்கம் போக்குவரத்துத்துறை



சென்னை, அக். 3

போக்குவரத்துக் கழகம் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கம் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

04/10/2024 (வெள்ளிக்கிழமை) 05/10/2024 (சனிக்கிழமை) 06/10/2024 (ஞாயிறு) விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை. திருச்சி. கும்பகோணம் மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 04/10/2024 (வெள்ளிக்கிழமை) அன்று 260 பேருந்துகளும், 05/10/2024 (சனிக்கிழமை) 200 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை நாகை, வேளாங்கண்ணி ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 04/10/2024 வெள்ளிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் 05/10/2024 சனிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூரு, திருப்பூர் ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 04/10/2024 அன்று 15 பேருந்துகளும் 05/10/2024 அன்று 15 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும் ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 5,939 பயணிகளும் சனிக்கிழமை 3.869 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 6,667 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள பயணத்திற்கு www.Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

# செம்பனார்கோயில் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்: மாவட்ட கலெக்டர் பங்கேற்பு



மயிலாடுதுறை, அக். 3

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், செம்பனார்கோயில் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி சிறப்புப்பார்வையாளராக கலந்து கொண்டார். இக்கூட்டத்திற்கு மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திருமதி. உமாமகேஸ்வரி சங்கர் அவர்கள், ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் முன்னிலை வகிக்க, செம்பனார்கோயில் ஊராட்சி மன்றத் தலைவர் டி.விஸ்வநாதன் தலைமை வகித்தார்.

இக்கிராம சபை கூட்டத்தில் பெண்களுக்கு மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சமூக தீமை நிராகரிப்பு, தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம், துய்மை பாரத இயக்க திட்டம், ஜல் ஜீவன் இயக்கம் உள்ளிட்ட 14 கூட்டப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி தினத்தையொட்டி நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் கலந்துகொள்வது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கிராம சபை கூட்டம் என்பது கிராம வளர்ச்சி குறித்து விவாதிக்க மக்களின் பங்களிப்போடு நடத்தப்படுவதாகும். மேலும் அரசுக்கு கல்வியும், சுகாதாரமும் மிக முக்கியமாக கருதப்படுகிறது. இக்கிராம சபை கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு அரசு மக்களுக்கு தேவையான திட்டங்களை தீட்டி அதை முழுமையாக மக்கள் பயனடைகின்ற வகையில் செயல்படுத்தி வழங்கப்படுகிறது.வேளாண்மைதுறை சார்பில் இடுப்பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது. அரசின் திட்டங்களை மக்கள் அறிந்து பயன்படுத்தி கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் போதைப்பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள நகர, கிராம ஊராட்சிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் பகுதிகளில் கள்ளச்சாராயம், போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை அறிந்தால் உடனடியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்: 1077 மற்றும் 7092255255 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிலும் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம் என மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி தெரிவித்தார்கள்.

முன்னதாக, சமூகநலத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.3000 மதிப்பீட்டில் வேளாண் இடுபொருட்களும், தோட்டக்கலைத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ. 225 மதிப்பிலான காய்கறி விதைகளையும் கலெக்டர் வழங்கினார்.

# காந்தி ஜெயந்தியையொட்டி காங்கிரஸ் சார்பில் விழிப்புணர்வு பேரணி



அலங்காநல்லூர், அக்.3

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் இந்திய தேசிய காங்கிரஸ் வடக்கு மாவட்டம் சார்பில் தெற்கு வட்டார தலைவர் சுப்பாராயலு, ஏற்பாட்டில் தேச தந்தை மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள் விழா மற்றும் பெருந்தலைவர் காமராஜர் நினைவு நாளையொட்டி கல்லணை, காந்திகிராமம் பஸ் நிலையம் முதல் கேட்டுக்கடை சந்திப்பு வரை காந்திய சிந்தனை, அமைதி, மத நல்லிணக்கம், அகிம்சை, வெறுப்பு அரசியலுக்கு எதிரான பிரச்சாரம் ஆகியவற்றை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதற்கு மாவட்ட தலைவர் ஆலாத்தூர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் சட்டமன்ற குழு தலைவர் ராமசாமி பேரணியை துவக்கி வைத்தார். பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயமணி, நூர் முகமது, காரணம், திலகராஜ், முருகன், காங்கிரஸ் மூத்த தலைவர் தனுஷ்கோடி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகளிரணி மாவட்ட தலைவி செல்லப்பா சரவணன், அமைப்பு சாரா தொழிலாளர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் சோணைமுத்து, மனித உரிமை மாவட்ட தலைவர் முத்து ஆகியோர் சிறப்புரையாற்றினர். வட்டாரத் தலைவர்கள் சீனிவாசன், சிவராமன், சந்தானம், சுப்பராயலு, காந்திஜி, குருநாதன், பழனிவேல், சோழவந்தான் நகர் தலைவர் முத்துப்பாண்டி, முன்னாள் வட்டாரத் தலைவர் மலைக்கனி, பாலமுருகன், கார்த்திக், செய்யது, திரவியம், முத்தன், மலைராஜன், கண்ணுச்சாமி, தர்மர், மகேஷ் திருப்பதி, பாலமேடு சந்திரசேகர், இளைஞர் காங்கிரஸ் தொகுதி துணைத் தலைவர் இளவரசன், வரிசை முகமது, சாமிநாதன், மேலசின்னம்பட்டி ராமச்சந்திரன், சமூக ஆர்வலர் முருகன், பாலமுருகன், செல்லதுரை, சுகுமாரன், மூத்த காங்கிரஸ் தலைவர் செல்வராஜ், பாலுச்சாமி, கார்த்திக், நாகமலை, மணியஞ்சி பாஸ்கர சேதுபதி, நேதாஜி நகர் கார்த்திகா, ராஜேந்திரன், வாவிடமருதூர் மலைச்சாமி, தேவராஜன் உள்ளிட்ட சுமார் 250க்கும் மேற்பட்ட

காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து காந்தியடிகள் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து தீண்டாமை ஒழிப்பு, வன்முறை தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். முடிவில் அமைப்புசாரா தொழிலாளர் காங்கிரஸ் வட்டார தலைவர் முத்து நன்றி கூறினார். முன்னதாக இப்பேரணியில் கருப்பட்டி முருகன், மற்றும் செல்வி சாய்நிலாவும் காந்தி வேடம் அணிந்து பேரணியில் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.2.93 கோடி கதர் விற்பனை இலக்கு நிர்ணயம்: ஆட்சித்தலைவர் தகவல்



சேலம், அக். 3

சேலம், திருவள்ளுவர் சிலை அருகில் உள்ள அண்ணா பட்டு மாளிகையில் அமைந்துள்ள காதி கிராப்ட் விற்பனை அங்காடியில் கதர்கிராமத் தொழில்கள் (காதி கிராப்ட்) சார்பில் உத்தமர் காந்தியடிகளின் 156வது பிறந்தநாள் விழா மற்றும் தீபாவளி கதர் சிறப்புத் தள்ளுபடி விற்பனைத் தொடக்க விழா மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, கதர் பொருட்களைப் பார்வையிட்டு, தீபாவளி கதர் சிறப்புத் தள்ளுபடி முதல் விற்பனையினை தொடங்கி வைத்தார். பின்னர், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகவும், தன்னிகரற்ற முன்னேற்றத்திற்காகவும் தன் வாழ்க்கையினையே முழுமையாக அர்ப்பணித்த மகாத்மாவின் நினைவுகளைப் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

சேலம் மாவட்டத்திற்கு 2024-25 ஆம் ஆண்டிற்கு ரூ.2.93 கோடி கதர் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் ரூ.2.82 கோடி மதிப்பிற்கு கதர் இரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தீபாவளி சிறப்பு விற்பனையை முன்னிட்டு 3 தற்காலிக விற்பனை நிலையங்கள் அமைத்து கதர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என கலெக்டர் பிருந்தாதேவி தெரிவித்தார்.

# ராமநாதபுரம் மாவட்டத்தில் கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனை தொடக்கம்



இராமநாதபுரம், அக். 3

இராமநாதபுரத்தில் கதர் கிராமத்தொழில் வாரியத்துறையின் மூலம் செயல்பட்டு வரும் கதர் விற்பனை நிலையத்தில் அண்ணல் காந்தியடிகளின் 156வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனையை குத்துவிளக்கேற்றி வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்து வாடிக்கையாளர்களுக்கு கதர் ஆடைகளை வழங்கி தெரிவிக்கையில்,

மக்களின் தேவை அறிந்து கதர் விற்பனை நிலையங்களில் பல்வேறு வகையான கதர் ரகங்கள் பாலியஸ்டர் ரகங்கள், கண்கவர் பட்டு சேலைகள், பெட்சீட்கள், மெத்தைகள், தலையணைகள், தலையணை உறைகள், மெத்தை விரிப்புகள் மற்றும் துண்டு வகைகள் அதிகளவு தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது. மேலும் கதர் கிராம தொழில் நிறுவனம் மூலம் சந்தன

மாலை, சாம்பிராணி ஜவ்வாது, குளியல் மற்றும் சலவை சோப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களும் தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது.

அந்த வகையில் நடப்பாண்டிற்கு ரூ.1.00 கோடி இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு மக்கள் ஆதரவுடன் இலக்கீடு எய்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் காந்தி ஜெயந்தி மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கதர் ரகங்களுக்கு 30 சதவீதமும், பாலிஸ்டர் ரகங்களுக்கு 30 சதவீதமும், பட்டு ரகங்களுக்கு 30 சதவீதமும் என சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மையத்திற்கு வருகை தந்து கதர் ஆடைகளை வாங்கி இலக்கீடை எய்வதுடன் நெசவாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்திட வேண்டுமென மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கதர் விற்பனை மைய மேலாளர் சதீஷ்குமார், தரகட்டுப்பாட்டு அலுவலர் பால்ராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பாண்டி அவர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) விஜயக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நெல்லை ஷிபா மருத்துவமனை சார்பில் உலக இருதய தின விழிப்புணர்வு மாரத்தான்



நெல்லை, அக். 3

உலக இருதய தினத்தை ஒட்டி ஷிபா மருத்துவமனை சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆண்கள், பெண்கள், மற்றும் குழந்தைகள் கலந்து கொண்ட 5 கிலோமீட்டர் விழிப்புணர்வு மாறத்தான் ஓட்டம் அண்ணா ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இந்த மாரத்தான் ஓட்டம் அண்ணா ஸ்டேடியத்தில் தொடங்கி சேவியர் கல்லூரி அண்ணா நகர் காவல் ஆணையர் அலுவலகம் வழியாக மீண்டும் அண்ணா ஸ்டேடியம் வந்தடைந்தது. இதில் சேலம், மதுரை, தேனி, தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 3000 பேர் கலந்து கொண்டனர். அதைத்தொடர்ந்து வெற்றி பெற்றவர்களுக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பரிசுகள் வழங்கப்பட்டது. ஆண்கள் பிரிவில் முதல் பரிசை மோகன, பெண்கள் பிரிவில் முதல் பரிசை மீனு, குழந்தைகள் பிரிவில் முதல் பரிசை பெற்றுக்கொண்டனர். முன்னதாக போட்டியின் ஆண்கள் பிரிவினை திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் ப்ரூஸ் அவர்களும் பெண்கள் பிரிவினை பாலை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப் அவர்களும், குழந்தைகள் பிரிவினை துணை மேயர் ராஜி அவர்களும் கொடியசைத்து துவக்கி வைத்தனர். ஷிபா மருத்துவமனையில் நிர்வாக இயக்குனர் முகமது ஷாபி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இருதய மருத்துவர்கள் கிரிஷ் தீபக், கணேசன் ஆகியோர் இருதய தின சிறப்பு செய்தி வழங்கினர். யூடியை மியூச்சுவல் பண்ட் மேலாளர் ராஜா குருஜி, ஹெச்.டி.எஃப்.சி பேங்க் மேலாளர் கோமதி நாராயணன், ராஜேஷ் எலக்ட்ரிகல்ஸ் அதிபர் மகாவீர், எம். கே. எம். தங்க மாளிகை பங்குதாரர் வாஜித், மருத்துவர் இப்ராஹிம், அகமது யூசுப் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை மருத்துவமனையின் மார்க்கெட்டிங் பிரிவினர் செய்திருந்தனர்.

# நெல்லை மாவட்டத்தில் கதர் விற்பனை: கலெக்டர் தொடங்கி வைத்தார்




திருநெல்வேலி, அக். 3

உத்தமர் காந்தியடிகளால் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு ஆண்டு முழுவதும் வாழ்வளிக்க வேண்டுமென்ற சீரிய நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது தான் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கிராமப்புறங்களில் உள்ள கதர் நெசவாளர்களால் நவீன சுழலுக்கு ஏற்ப புத்தம் புது வடிவமைப்புகளில் கண்ணைக் கவரும் வண்ணத்தில் நெசவு நெய்யப்படும் கதராடைகள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் பலதரப்பட்ட கிராமப் பொருட்களை தமிழ்நாட்டிலுள்ள கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்திட தமிழ்நாடு அரசு தூண்டுகோலாய் துணை நின்று அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 20232024 ஆம் நிதியாண்டிற்கு மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மழைக்கால பராமரிப்பு உதவித் தொகையாக 355 பயனாளிகளின் குடும்பங்களுக்கு தலா ரூ.5,000 வீதம் ரூ.17.75 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தீபாவளி சிறப்பு கதர் விற்பனையை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள், அரசு மருத்துவமனை வளாகங்களில் தற்காலிக கதர் விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களில் 02.10.2024 முதல் கதர் சிறப்பு விற்பனை காலம் முடியும் வரை தற்காலிக கதர் விற்பனை நிலையங்கள் செயல்படும்.

மேலும், தரமிக்க அசல் வெள்ளி ஜரிகையினால் ஆன பட்டு சேலைகள், பட்டு வேட்டிகள், பட்டு துண்டுகள், கதர் வேஷ்டிகள், துண்டு ரகங்கள், ரெடிமேட் சட்டைகள், இலவம் பஞ்சினால் ஆன மெத்தை, தலையணைகள், கதர் பாலியஸ்டர் மற்றும் உல்லன் ரகங்களும், சுத்தமான அக்மார்க் தேன், குளியல் சோப்பு, சாம்பிராணி, புஜைப் பொருட்கள், பனைவெல்லம் மற்றும் பனை பொருட்களும் தரத்துடன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக மத்திய, மாநில அரசுகளினால் கதர் ரகங்களுக்கு 30மும், உல்லன் ரகங்களுக்கு 20மும் ஆண்டு முழுவதும் சிறப்பு தள்ளுபடி அனுமதிக்கப்படுகிறது. வாங்கி ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

# தஞ்சையில் சிவாஜி கணேசன் பிறந்த நாள் விழா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்




தஞ்சாவூர்,அக்.3

நடிகர்திலகம் சிவாஜி கணேசன் 96வது பிறந்த நாள் விழா மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதன்படி தஞ்சை நவநீதபுரம் ரவுண்டானா வில் உள்ள சிவாஜி கணேசன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. விழாவிற்கு சோழ மண்டல சிவாஜி பாசறை தலைவர் சதா.வெங்கட்ராமன் தலைமை தாங்கினார். மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் சிவாஜி கணேசன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து மற்றவர்கள் சிலைக்கு மாலை அணிவித்தனர். விழாவில் தஞ்சை மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பி.ஜி.ராஜேந்திரன் தெற்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் வழக்கறிஞர் அன்பரசன் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பண்ணைவயல் ராஜாதம்பி மாவட்ட சிவாஜி மன்ற தலைவர் வைரக்கண்ணு தஞ்சை மாவட்ட நாயுடு பெருமக்கள் நலச் சங்க பொருளாளர் ஆர்.கே.பாஸ்கர் நாயுடு ஆடிட்டர் செல்வராஜ் எல்.ஐ.சி.கணேசன் வர்த்தக சங்க தலைவர் ஜெயக்குமார் பூண்டி கல்லூரி முன்னாள் பேராசிரியர் விஜய் ராமலிங்கம் மாவட்ட ராஜீவ்காந்தி பஞ்சாயத்ராஜ் தலைவர் செந்தில் நா.பழநிவேல் வெள்ளாம் பெரம்பூர் ரமேஷ் குமார் ரோட்டரி சங்க தலைவர் கோவி.

மோகன் தமிழ் தேசிய பேரியக்கம் மாநகர தலைவர் பழ.ராஜேந்திரன் வல்லுண்டாம்பட்டு கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பின்னர் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

# திருவில்லிபுத்தூரில் லயன்ஸ் பள்ளி மாணவர்களது நாட்டு நலப்பணி மற்றும் சிறப்பு கால்நடை முகாம்



ஸ்ரீவில்லிபுத்தூர், அக். 3

அத்திகுளம் பஞ்சாயத்தைச் சேர்ந்த செங்குளம் கிராமத்தில் ஸ்ரீவி லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் மாணவர்கள் ஏழு நாட்கள் முகாமிட்டுநாட்டு நல பணிகளை செய்து வருகின்றனர். ஐந்தாவது நாளாக செவ்வாய்க் கிழமை அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம் கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக சிறப்பு கால்நடை மற்றும் விழிப்புணர்வு முகாம் டாக்டர் கார்த்திக் மற்றும் அவரது குழுவினரோடு நடைப்பெற்றது.

முகாமில் செங்குளம் கிராம மக்கள் தங்களுடைய நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு(ஆடு, மாடு, மாற்றும் கோழி) தடுப்பூசி, சினை பரிசோதனை, குடற்புழு நீக்கம், பொது சிகிச்சை போன்ற மருத்துவ சேவைகளைப் பெற்று பயன்பெற்றனர். முகாமிற்கு ஸ்ரீவி லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திரு வெங்கடாஜலபதி தலைமை வகித்தார், பள்ளி முதல்வர் திரு சுந்தரமகாலிங்கம் முன்னிலை வகித்தனர். திட்ட அலுவலர் திரு பழனிவேல் அவர்கள் இந்த முகாமிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஸ்ரீவி லயன்ஸ் சங்க உறுப்பினர்கள், ஊர் தலைவர் திரு திருப்பதி மற்றும் ஊர் பொதுமக்கள் முகாமில் கலந்துக்கொண்டு சிறப்பு செய்தனர்.

# பரமத்தி வேலூர் ஊராட்சி ஒன்றியம், குன்னமலை கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டம்

நாமக்கல், அக். 3

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் ஊராட்சி ஒன்றியம், குன்னமலை கிராமத்தில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு, ஊராட்சி மன்ற தலைவர் கே.பூங்கொடி தலைமையில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட கலெக்டர் ச.உமா, கலந்து கொண்டார்.

நாமக்கல் மாவட்ட கலெக்டர் ச.உமா, தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணத்தை திட்டம், மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000/ வழங்கும் திட்டம், 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, விவசாய கடன் தள்ளுபடி, முதியோர் உதவித்தொகை உயர்வு, அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவ, மாணவியர்கள் மருத்துவம், பொறியியல், சட்டம், கலை, அறிவியல், தொழில் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி பயில 7.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு மற்றும் மாதம் ரூ.1,000/ வழங்கும் புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், காலை உணவுத்திட்டம், ஏழை, எளிய மக்களுக்கு வீடு கட்ட ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள். பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளை கட்டாயம் பள்ளிக்கு அனுப்பிட வேண்டும். பெண் குழந்தைகளுக்கு கட்டாயம் கல்வி அளிப்பது நம் அனைவரது கடமை ஆகும். தமிழ்நாடு அரசும் பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவித்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். இன்றைய தினம் பரமத்தி வேலூர் ஊராட்சி ஒன்றியம், குன்னமலை கிராமத்தில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு கிராம சபைக்கூட்டம் நடைபெற்று வருகிறது. நம் கிராமம் மற்றும் நம் குழந்தைகளை தடைசெய்யப்பட்ட போதை பொருட்களின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க வேண்டியது நம் அனைவரது கடமையாகும். பெண் குழந்தைகள் கல்வி கற்று சுய தொழில் தொடங்கி தொழில் முனைவோராக உருவாகி வேலை வாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் சுய தொழில் தொடங்கிட மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் கடனுதவி வழங்கி வருகின்றார்கள்.

மேலும் சுற்றுப்புற சுகாதாரம் என்பதை அனைவரும் பின்பற்ற வேண்டும். வீடுகளில் தனி நபர் கழிப்பிடங்களை பயன்படுத்திட வேண்டும். நெகிழி பைகளின் பயன்பாட்டினை தவிர்த்து அனைவரும் மஞ்சபை மற்றும் துணி பைகளை பயன்படுத்திட வேண்டும். நெகிழி பைகளை ஒழித்திட அனைவரும் உறுதி மொழி ஏற்க வேண்டும். டெங்கு கொசு ஒழிப்பில் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றிட வேண்டும். வீடுகளில் குடிநீர் சேமித்து வைத்துள்ள பாத்திரங்களை மூடி வைத்து பயன்படுத்த வேண்டும். நீர் தேக்காத வகையில் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும். பெண் குழந்தை திருமணத்தை தடுத்திட புகார் அளிக்க 1098 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்திட வேண்டும். மேலும், தங்கள் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு அவசர கால சிகிச்சைக்கு 1962 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு கால்நடை அவரச ஊர்தி சேவையை பெற முடியும் என நாமக்கல் மாவட்ட கலெக்டர் ச.உமா தெரிவித்தார்.

# ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் மாநில பொதுக்குழு கூட்டம் நெல்லை மாவட்ட தலைவர் சோமசுந்தரம் பேசினார்




நெல்லை, அக். 3

ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் மாநில பொதுக்குழு கூட்டம் திருநெல்வேலி சந்திப்பு ஹோட்டல் ஆர்யாசில் இன்று காலை நடைபெற்றது.. நெல்லை மாவட்ட தலைவர் சோமசுந்தரம் வரவேற்றுப் பேசினார் . மாநிலத் தலைவர் மணிநந்தன் தலைமை தாங்கினார். பாராளுமன்ற குழு தலைவர் லட்சுமணன் , மாநில பொருளாளர் ராஜகோபால், கட்சியின் மூத்த துணை தலைவர் முருகப்பன் , மாநில துணைத்தலைவர் பார்த்திபன், பொதுச் செயலாளர் பொய்யாமொழி என்ற சந்திரமோகன் ஆகியோர் முன்னில வகித்தனர் . கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு; தாமிரபரணி ஆற்றங்கரை மற்றும் அதன் நீர் நிலைகளை சுத்தம் செய்ய வேண்டும், ஆற்றில் கழிவு நீர் கலப்பதை தடை செய்ய வேண்டும், நெல்லையப்பர் காந்திமதி அம்மாள் கோவிலை சுற்றி பக்தர்களின் வசதிக்காக கழிப்பறை வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும் , நெல்லை மாநகரத்தில் பாதாள சாக்கடை திட்டம் கிடைப்பிலுள்ளது. அந்த பணிகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும், நெல்லை நகரத்தில் டக்கரம்மாள்புரம், தருவை |பழைய பேட்டை, தாழையூத்து வரை உள்ள வெளிவட்டச் சாலை திட்டப்பணி நீண்ட நாட்களாக கிடப்பில் இருந்து வருகிறது . இதனை உடனடியாக துவங்கப்பட்டு நிறைவேற்ற வேண்டும். தமிழ்நாடு ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் சார்பில் மாநாடு நடத்தப்படும் , அந்த மாநாடு திருநெல்வேலியில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது, விலைவாசி வியர்வை கண்டித்தும், பூரண மதுவிலக்கை தமிழகத்தில் அமல்படுத்த கோரியும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம், போராட்டம், உண்ணாவிரதம் ஆகிய அறவழிப் போராட்டங்கள் நடத்த நடத்தப்படும், பாளையங்கோட்டையில் படித்து இளைஞர்கள் நிறைய உள்ள நிலையில் அங்கு தொழில் நுட்பப் பூங்கா ஒன்று நிறுவ வேண்டும், ஆம்னி பேருந்துகளில் பயண கட்டண முறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட 26 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. . கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட துணைத்தலைவர் சுப்பிரமணியன், பொதுச் செயலாளர் ராமசாமி, பொருளாளர் மூர்த்தி, துணைச் செயலாளர் சுடலைமுத்து, துணை பொருளாளர் இசக்கி பாண்டி, மாவட்ட அமைப்பாளர் உச்சி மாகாளி, துணை அமைப்பாளர் தெய்வநாயகம் ,மாவட்ட இளைஞரணி தலைவர் தாழையூத்து செந்தில் முருகன், , மாவட்ட ஓபிசி பிரிவு தலைவர் மாரியப்பன், பாளை ஒன்றிய செயலாளர் பேராட்சி, தச்சை மண்டல செயலாளர் ஆறுமுக நயினார், மற்றும் நிர்வாகிகள் கோபால்சாமி, சேக் , நம்பி, நம்பி நாராயணன், முத்துராமன், கோகுல கண்ணன், ஐயப்பன், ராஜ் , சேரை சுரேஷ் , மூக்கன் உள்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக காந்தி ஜெயந்தி முன்னிட்டு நெல்லை டவுணில் உள்ள மகாத்மா காந்தி, தச்சநல்லூரில் உள்ள காந்தி சிலை மற்றும் நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலை ஆகியவற்றிற்கும் மாவட்டத் தலைவர் சோமசுந்தரம் முன்னிலையில் மாநிலத் தலைவர் மணிகண்டன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .இதிலும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சூரங்குளம் கிராமத்தில் வாழவந்தாள் அம்மன் முளைப்பாரி திருவிழா



முதுகுளத்தூர்;அக்.4

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகில் உள்ள சூரங்குளம் கிராமத்தில் ஆண்டுகளுக்கு ஒரு முறை வாழவந்தாள் அம்மன் முளைப்பாரி திருவிழா நடைபெறும்.இந்த வருடம் ஒரு வாரத்திற்கு முன்பாக கிராமமக்கள் காப்புக் கட்டுதல், முளைப்பாரி போடுதல் போன்ற நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நேற்று பெண்கள் முளைப்பாரியை தலையில் தூக்கி கொண்டு கோவிலின் அருகே வைத்து கும்மி கொட்டியும், ஆண்கள் ஒயிலாட்டம் ஆடியும் விழாவானது சிறப்பாக நடைபெற்றது.இந்த திருவிழாவை காண சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மாவட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்(டாம்கோ) கடன் திட்டங்கள் தொடர்பாக ஆய்வு




திண்டுக்கல், அக். 3

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) கடன் திட்டங் கள் தொடர்பாக டாம்கோ தலைவர் சி.பெர்னாண்டஸ் இரத்தின ராஜா, மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி தலைமையில் துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம் பாட்டுக் கழகம்(டாம்கோ) தலைவர் சி.பெர்னாண்டஸ் இரத்தின ராஜா தெரிவித்ததாவது;

தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்சியர்கள் மற்றும் ஜெயின் பிரிவைச் சார்ந்த மதவழி சிறுபான்மையின மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் (டாம்கோ) மூலம் தனிநபர் கடன் திட்டம், விசாரத் (கைவினை கலைஞர் கடன் திட்டம்), சுய உதவி (ஆண்/பெண்) குழுக்களுக்கான சிறுகடன் திட்டம், கல்விக்கடன் ஆகிய கடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தனிநபர் கடன் திட்டத்தின் கீழ் வியாபாரம் செய்யவும், தொழில் தொடங்கிடவும் அல்லது ஏற்கனவே செய்து வரும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் கடன் வழங்கப்படுகிறது.


விசாரத் (கைவினை கலைஞர் கடன் திட்டம்) திட்டத்தின் கீழ், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்களுக்கு தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு குறைந்த வட்டி விகிதத்தில் மூலப்பொருட்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் வாங்குதவற்காக இக்கடன் வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு 2024-2025ஆம் நிதியாண்டிற்கு பொதுக்கால கடன் தொகை ரூ.200.00 இலட்சம், கைவினைஞர் கடன் தொகை ரூ.5.00 இலட்சம், சிறுகுறு தொழில் கடன் தொகை ரூ.590.00 இலட்சம், கல்விக் கடன் தொகை ரூ.5.00 இலட்சம் என மொத்தம் ரூ.800.00 இலட்சம் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் 50 பயனாளிகளுக்கு ரூ.37.20இலட்சம் மதிப்பீட்டிலான கடன்தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாகல் நகர் கூட்டுறவு வங்கி மூலம் என்யுஎல்எம் முல்லைக்கொடி மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.5.50 இலட்சம், சின்னாளப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் மெசியா மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.14.00 இலட்சம், மரியா மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.6 இலட்சம், டி.கொசவப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் பூண்டி மாதா மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.11.70 இலட்சம் கடனுதவிகள் என 50 பயனாளிகளுக்கு ரூ.37.20 இலட்சம் மதிப்பீட்டிலான கடன்தொகை இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற திட்டங்களை பொதுமக்கள் நன்கு பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும், என தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்(டாம்கோ) தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் திரு.கோ.காந்திநாதன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் திருமதி சுபாஷினி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.மா.மாரி, துணை ஆட்சியர்(பயிற்சி) செல்வி ராஜேஸ்வரி சுவி உட்பட துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இரண்டு நாட்களில் வீடு திரும்புவார் ரஜினிகாந்த் அப்போலோ அறிக்கை



தமிழ் திரையுலகின் சூப்பர் ஸ்டாரான நடிகர் ரஜினிகாந்துக்கு நேற்று இரவு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அதற்குபின் அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அதைத்தொடர்ந்து ரஜினிகாந்திற்கு ஆஞ்சியோகிராம் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் ரத்த குழாயில் உள்ள அடைப்பும் வீக்கமும் கண்டறியப்பட்டது. உடனடியாக அதற்கேற்ற சிகிச்சையை டாக்டர் சாய்சதீஷ் தலைமையிலான டாக்டர் குழுவினர் அளித்தனர்.

இது தொடர்பாக அப்போலோ மருத்துவமனை ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன்படி ரஜினிகாந்த் தற்பொழுது சீராக உள்ளார். அறுவை சிகிச்சையில்லாமல் இருதயத்தில் கதீட்டர் மூலம் ஸ்டெண்ட் வைக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு நாட்களில் ரஜினிகாந்த் வீடு திரும்புவார் என அறிவித்துள்ளனர். இதனால் ரசிகர்கள் மன நிம்மதி அடைந்துள்ளனர்.

# தளபதி 69 படத்தில் இணைந்த சூர்யா படத்தின் வில்லன்




வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளிவந்துள்ள கோட் திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது.

அடுத்ததாக தளபதி 69 படத்தில் விஜய் நடிக்கவுள்ளார். இப்படமே விஜய் நடிக்கும் கடைசி படம் என கூறி வருகின்றனர். அதற்கடுத்து முழுவதுமாக அரசியல் பணியில் ஈடுப்படவுள்ளதாக கூறியிருந்தார்.


தளபதி 69 படத்தை தீரன், துணிவு போன்ற அட்டகாசமான படங்களை இயக்கிய எச். வினோத் இயக்கவுள்ளார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கவுள்ளார்.

இப்படம் அடுத்தாண்டு அக்டோபர் மாதம் வெளியாகவுள்ளது. பிரபல தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் நிறுவனம் தமிழில் தயாரிக்கும் முதல் படம் இதுவாகும். படத்தில் நடிக்கும் நடிகர்களை இன்று முதல் 3 நாட்களுக்கு அறிவிக்கப்படும் என படக்குழு அறிவித்துள்ளது.

அதேப்போல் முதலாவதாக அனிமல் படத்தில் வில்லனாக நடித்து அசத்திய பாபி தியோல் இப்படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளார். அது மட்டுமல்லாமல் பாபி த்யோல் சூர்யா நடித்துள்ள கங்குவா திரைப்படத்திலும் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார்.

என படக்குழு போஸ்டர் வெளியிட்டுள்ளனர். பட பூஜை விழா வரும் அக்டோபர் 4 ஆம் தேதி நடக்கவுள்ளதாக தகவல் வெளியாகி வருகிறது.

# வனிதா விஜயகுமாருக்கு மீண்டும் திருமணமா?




சின்னத்திரை மற்றும் வெள்ளித்திரையிலும் மிகவும் பரீட்சையமானவர் வனிதா விஜயகுமார். இவர் பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் மிகப் பெரிய அளவில் ரீச் கிடைத்தது. ராபர்ட் மாஸ்டரும் வனிதாவிஜயகுமாரும் காதலித்து ஒன்றாக வாழ்ந்து வந்தனர். பின் மனகசப்பால் பிரிந்து விட்டனர்.

தற்பொழுது அவர்கள் இருவரும் இணைந்து Mr&Mrs என்ற திரைப்படத்தில் நடித்துள்ளனர். படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் கூடிய விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வனிதா விஜயகுமார் வெளியிட்ட புகைப்படம் இணையத்தில் பேசுபொருளாக மாறியுள்ளது. அதில் வனிதா கடலோரத்தில் ராபர்ட் மாஸ்டருக்கு ப்ரொபோஸ் செய்வது போல் சேவ் தி டேட் என்ற தலைப்பில் காட்சி அமைந்துள்ளது.

இதனால் நெட்டிசன்கள் மீண்டும் வனிதா திருமணம் செய்துக் கொள்ள போகிறாரா. என பலவாறு கமெண்டுகளை கொட்டித்தீர்த்து வருகின்றனர். ஆனால் இது அந்த படத்திற்கான ப்ரோமோஷன் என சிலர் கூறி வருகின்றனர். எது உண்மை என்று அக்டோபர் 5 ஆம் தேதி பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கேப்டன் பதவியில் இருந்து பாபர் அசாம் மீண்டும் விலகல்



இந்தியாவில் நடைபெற்ற 50 ஓவர் உலகக் கோப்பை தொடரில் பாகிஸ்தான் ஜொலிக்காததைத் தொடர்ந்து பாபர் அசாம் கேப்டன் பதவியை ராஜினாமா செய்தார்.

இதனால் ஷாஹீன் அப்ரிடி பாகிஸ்தான் டி20 அணி கேப்டனாக நியமிக்கப்பட்டார். இவரது தலைமையில் பாகிஸ்தான் அணி தொடர் தோல்விகளை சந்தித்து.

இதனையடுத்து டி20 உலகக்கோப்பையை ஒட்டி மீண்டும் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியின் புதிய கேப்டனாக பாபர் அசாம் நியமனம் செய்யப்பட்டார். ஆனால் டி20 உலகக்கோப்பையில் அரையிறுதிக்கு கூட முன்னேற முடியாமல் பரிதாபமாக பாகிஸ்தான் வெளியேறியது. இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கேப்டன் பதவியை ராஜினாமா செய்வதாக பாபர் அசாம் அறிவித்துள்ளார்.

பணிச்சுமை அதிகமாக உள்ளதால் கேப்டன்சியில் இருந்து விலகி தனது ஆட்டத்தில் கவனம் செலுத்தவுள்ளதாக பாபர் அசாம் கூறியுள்ளார்.

# நீண்ட நாட்களுக்கு பிறகு.. மகளுடன் ஷாப்பிங் சென்ற முகமது ஷமி வீடியோ வைரல்




இந்திய அணியின் மிக முக்கிய பந்துவீச்சாளராக முகமது ஷமி திகழ்ந்து வருகிறார். ஒருநாள் உலகக்கோப்பை போட்டிகளில் இந்திய அணிக்காக அதிக விக்கெட் வீழ்த்தியர்களின் பட்டியலில் முகமது ஷமி முதலிடத்தில் உள்ளார்.

கிரிக்கெட்டில் பல சாதனைகளை நிகழ்த்தி வரும் முகமது ஷமியின் திருமண வாழ்க்கை சோகத்தில் முடிந்தது. முகமது ஷமியுடன் சேர்ந்து வாழ முடியாது என அவரது மனைவி ஹசின் ஜஹான் விவாகரத்து பெற்றார். இந்த தம்பதிக்கு ஆயிரா என்ற ஒரு மகள் உள்ளார்.

இந்நிலையில், நீண்ட நாட்களுக்கு பிறகு தனது மகள் ஆயிராவை முகமது ஷமி சந்தித்துள்ளார். தந்தையும் மகளும் ஒன்றாய் சேர்ந்து ஷாப்பிங் சென்றுள்ளனர். மகளுடன் ஒன்றாக ஷாப்பிங் சென்ற வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் முகமது ஷமி பகிர்ந்துள்ளார். அந்த பதிவில், "நீண்ட நாட்களுக்குப் பிறகு அவளை மீண்டும் பார்த்தபோது என்னுடைய நேரம் நின்றது. வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்கு உன்னை நேசிக்கிறேன்" என்று அவர் பதிவிட்டுள்ளார். காயத்தில் இருந்து மீண்டுள்ள முகமது ஷமி விரைவில் இந்திய அணியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சீனா ஓபன் டென்னிஸ்: காயத்தால் விலகிய ஒசாகாகாலிறுதியில் நுழைந்தார் கோகோ காப்



பல முன்னணி வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சீனா ஓபன் டென்னிஸ் தொடர் சீனாவில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்றுப் போட்டியில் நம்பர் 4 வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காப், ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை ஒசாகா 63 என கைப்பற்றினார். இதற்கு பதிலடியாக அடுத்த செட்டை கோகோ காப் 64 என கைப்பற்றினார்.

அப்போது ஒசாகாவுக்கு தசை பிடிப்பு ஏற்பட்டதால் போட்டியில் இருந்து விலகினார். இதனால் கோகோ காப் வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் கோகோ காப், உக்ரைன் வீராங்கனையை எதிர்கொள்கிறார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.